**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 283** **நாள் : 10.07.2026**

**சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் குடியிருப்பு கட்டடத்திற்கான திட்ட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டடங்களை வணிக பயன்பாட்டிற்காக பயன்படுத்துதல் மற்றும் திட்ட அனுமதிக்கு மாறான விதிமீறல் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது உடனுக்குடன் தொடர் நடவடிக்கை எடுக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் குறித்த உச்சநீதிமன்ற வழக்கு சம்பந்தமாக மாநகராட்சி ஆலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (10.07.2026) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் குடியிருப்பு கட்டடத்திற்கான திட்ட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டடங்களை வணிக பயன்பாட்டிற்காக பயன்படுத்துதல் மற்றும் திட்ட அனுமதிக்கு மாறான விதிமீறல் கட்டிடங்கள் ஆகியவற்றின் மீது உடனுக்குடன் தொடர் நடவடிக்கை எடுத்து, அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேற்படி அமலாக்கப்பணிகளை கண்காணிக்க வட்டார அளவில், வட்டார துணை ஆணையர், கண்காணிப்பு பொறியாளர், முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் மண்டல அலுவலர் ஆகியோரை கொண்ட ஒரு குழுவும், மண்டல அளவில் மண்டல அலுவலர், செயற்பொறியாளர், முதுநிலை வருவாய் அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரை கொண்ட மற்றொரு குழுவும் அமைக்கப்பட்டு செயல்படுகிறது என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் காணொலி காட்சியின் வாயிலாக இணை ஆணையர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி சித்ரா விஜயன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு) மற்றும் முதுநிலை சட்ட அலுவலர் திரு.எஸ். ஜேக்கப் ராஜன்பாபு, அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**

# GREATER CHENNAI CORPORATION

## PRESS RELEASE

**P.R.No. 283** **Date : 10.07.2026**

To-day 10.30 a.m., the Commissioner of Greater Chennai Corporation convened a meeting at Ripon Buildings along with the Corporation Officers, with regard to the Supreme Court Case related to the action taken on the unauthorised constructions /constructions violating the rules.

In the meeting, the Commissioner instructed the Officers to take continuous action immediately, on the buildings constructed in the Chennai Corporation limits unauthorised / by violating the rules, especially buildings for which Planning Permission obtained for residential purpose and using for commercial purpose and send reports.

The Commissioner informed that to supervise the above said enforcement activities, there are two Committees are functioning, one at Regional Level comprising the members (1) Regional Deputy Commissioner, (2) Superintending Engineer, (3) Senior Revenue Officer (4) Zonal Officer and another one at Zonal Level comprising the members (1) Zonal Officer, (2) Executive Engineer, (3) Senior Revenue Officer (4) Assistant Executive Engineer.

In this meeting via video Conference Joint Commissioner (Works) Mr. S. Saravanan, I.A.S., Deputy Commissioner (R & F) Mrs. Chitra Vijayan, I.A.S, Regional Deputy Commissioners Mr. H.R. Kaushik, I.A.S., (Central) and Mr. Aftab Rasool, I.A.S., (South), Senior Legal Officer Mr. S. Jacob Rajanbabu, and other officials participated.

**Issued : Joint Director/Public Relations Officer,**

**Greater Chennai Corporation**